# தியானமும்
# வாழ்க்கை உயர்வும்

கா. சுப்பிரமணியப் பிள்ளை, எம். ஏ., எம். எல்.

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

அறிவே ஆற்றல்
உமாதேவன்

உமாதேவன் கம்பெனி
16, செம்புதாஸ் தெரு, சென்னை-1

முதற் பதிப்பு 1947

பதிப்புரிமை

6321a

விலை அணா 8

The Jupiter Press, Ltd., Madras, for MS. 42—12-1947.

6/4 : 150

## முன்னுரை

'அறிவுச் சுடர்' என்னும் மகுடம் புனைந்து வெளி வரும் இந்நூல் வரிசை அறிவும் அனுபவமும் வாய்ந்த நல்லறிஞரால் எழுதப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளைக் கொண்டு திகழ்வதாகும். மலர்தொறுஞ் சார்ந்து துளித்துளியாகத் தேனைச்சேகரித்துப் பிறர்க்குதவும் பெற்றி வாய்ந்த தேனீக்களைப் போலப் பன்னூற்பயிற்சியாலும் வாழ்க்கை அனுபவத்தாலும் அரிதின் முயன்று சேகரித்த அருங்கருத்துகளை அனைவருங் கற்றுப் பயனெய்துமாறு அறிஞர்கள் எழுதி உதவும் நூல்களை வெளியிடக் கருதியுள்ள எமக்குத் தமிழன்பர் காட்டும் ஆதரவே எம்மை இத்துறையில் தொடர்ந்து முயல ஊக்குதற்கு உறுதுணையாம். ஆதலின், அன்பர் பலரும் இவ்வரிசையில் வெளிவரும் நூல்களை வாங்கிப்படித்து எம்மை ஊக்கியருள வேண்டுகிறோம்.

பதிப்பகத்தார்

# தியானமும் வாழ்க்கை உயர்வும்

## I

### ஓங்காரத் தெய்வ வணக்கம்

அல்லது

### பிள்ளையார் வழிபாடு

உலகங்களை எல்லாம் தோற்றுவிப்பதற்கு இறைவர் முதற்கண் ஒளியாயும், பின்னர் ஒலியாயும் விளங்கும் மூல வாக்கைத் தமது கடைக்கண் பார்வையால் உருப்படுத்தினர். அஃது உலகம் ஒடுங்கும்வரை அதிர்ச்சி செய்து கொண்டிருக்கும் உள்ளொலியாய் நாத தத்துவத்தில் உள்ளது. 'ஓவாத சத்தத்து ஒலியே போற்றி!' என்ற தேவார அடியுங்காண்க. அவ்வொலி செவிக்குப் புலனாகிய போது 'ஓம்' என்று ஒலிக்கும். 'ஓம்' என்பதற்கு உரிய தமிழ் முதல் எழுத்தாகிய ஓகாரம் துதிக்கை

யுடன்கூடிய யானை முகம் போன்றிருத்தலின், அவ்வொலி வடிவு வாயிலாக இறைவரை வழி படும் அன்பர், யானை முகப் பெருமானை அவரை வழிபடுவாராயினர். படைப்புக்கு முதலில் தோன்றிய ஓங்காரத்தை இறைவரது பிள்ளையெனப் பேசுவது வழக்கமாயிற்று. உலகத்திற்கு மூலமாய்த் தோன்றிய ஓங் காரத்தைத் திருமுகமாகவும், உலகங்களின் தொகுப்பாய் அமையும் இடத்தைப் பெரு வயிறாகவும், உலகத்தைத் தாங்கும் ஆற்றலைக் காலாகவும் அமைக்கப்பெற்ற திருமேனியே பிள்ளையார் திருவுருவாகும். பிள்ளையார் எல்லா ஒலிக்கும் முற்பட்ட ஓங்காரத்தினின்று எழுத் தொலிகளை எல்லாம் வகுத்து எழுதிக் கலைகளை வளர்ப்பவர் என்பதைக் குறிப்பதற்காக, ஒற்றைக்கொம்பு, பிள்ளையாரது திருக்கரம் ஒன்றில் அமையப் பெற்றுள்ளது.

'முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே !'

என்ற அருணகிரியார் வாக்கும் இக்கருத்து

உடையதே. பிள்ளையாரின் மற்ருெரு கையி லுள்ள மோதகம், அவர் வயிற்றுள் வைத்துப் பாதுகாக்கப்படும் உலகத்திற்கு அடையாள மாகும். பிள்ளையாரது மேற்கரம் ஒன்றிலுள்ள அங்குசம் (தோட்டி), உயிர்களின் செருக்கை அடக்கும் ஆற்றலைக் குறிப்பது. மற்ருெரு மேற்கரத்திலுள்ள பாசம் (கயிறு), எல்லா வற்றையும் ஒருவழிப்படுத்தி ஒழுங்கு செய்யும் ஆற்றலைக் குறிப்பதாகும். உலகங்கள் சுழலும்போது அவற்றை எல்லை கடவாது வரம்புட்படுத்துவதற்குப் பயன்படுவது அவ ரது திருச்செவியின் அசைவு என்று கல்லாடம் என்னும் தமிழ் நூல் கூறுகின்றது.

பிள்ளையாருக்குத் திருமுகமே யானையின் முகம் போன்றது. உடல் யானையின் உடல் போன்றதன்று. ஆதலால், அவரது நெற்றியி லிருந்து புறப்படும் ஞான ஒளியே மதம் எனப் படும். அந்த ஒரு மதமே அவருக்குண்டு. மும் மதம் என்பது உபசாரம். மும்மதம் என்ப தற்கு உயிர்களின் காம வெகுளி மயக்கம்

என்னும் மூக்குற்றத்தை நீக்க வல்ல மதம் என்றும் பொருள் கொள்ளலாம். துதிக் கையை ஒரு கரமாகச் சேர்த்துப் பிள்ளை யார்க்குத் திருக்கரம் ஐந்தென்பதும் உண்டு. பிள்ளையார் வடிவம் பல உள்ளன. அவற்றுள் ஒன்றிற்குப் பத்துக் கரங்கள் உண்டு. அவை யெல்லாம் விரிப்பின் பெருகும். அவருடைய அவயவங்கள், ஆயுதங்கள் எல்லாம் ஒவ்வோர் உண்மைக் கருத்தைக் குறிப்பதற்கே அமைந் துள்ளன என்பதை அறிக. உலகத்தை உள் நின்று ஊறுபடுத்தும் அழிவுச் சத்திகளை அடக்கியாளும் திறமை உடையவர் பிள்ளை யார். அப்படி அவர் செய்வதால், தம்மை நினைவாரது இடையூறுகளை நீக்க வல்லார் என்பது பற்றி, அவருக்கு 'விக்கினேச்சுரர்' என்னும் பெயர் ஏற்பட்டது. அத்தகைய அழிவுச்சத்திக்கு அடையாளமாக நிலத்தைத் துளைத்து ஊறுபடுத்தும் பெருச்சாளியை அவருக்கு வாகனமாக மாந்தர் அமைத்தனர் போலும்! இக்கருத்தை ஒரு கதை வடிவாகப் புராணங்கள் கூறும் :

ஓர் அசுரன், பிள்ளையாரால் எதிர்க்கப்பட்டபோது, பெருச்சாளி வடிவமாக மாறவே, அப்போது அவன்மீது ஏறி, அவனைப் பிள்ளையார் அடக்கினார் என்பது புராணக்கதை.

தேவ கணங்களுக்குப் பிள்ளையார் தலைவராய் இருத்தலால், அவரைக் 'கணபதி' என்றும், தமக்குமேல் ஒரு தலைவர் இல்லாதவராதலால், 'விநாயகர்' என்றும், அன்பர் வழங்குவார் ஆயினர்.

களங்கமற்ற ஞானமே அவரது திருவடிவம். ஆனது பற்றி, அவரது நிறத்தையும் உடையையும் வெண்மையாகவும், அவரைச் சருவ வியாபகராகவும் வடநூலார் வருணித்துக் கூறினர்.

சுக்கில அம்பரம்=வெள்ளை உடை, தரம்=தரித்தல், விஷ்ணு=வியாபகம், சசிவர்ணம்=சந்திர நிறம், சதுர்ப்புஜம்=நான்கு கை, பிரசன்ன வதனம்=யானை முகம்.

இந்தச் சொற்கள் வந்துள்ள சுலோகம் வருமாறு :

'சுக்லாம் பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்ப்புஜம்
பிரசன்ன வதனம் தியாயே
சர்வ விக்னோப சாந்தயே.'

'பிள்ளையாரை வழிபடுவதால் எல்லாச் செல்வமும் கிடைக்கும்; எண்ணிய எண்ணம் நிறைவேறும்,' என்னும் கருத்துப்பற்றி,

'திருவாக்கும் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்;
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.'

என்றார் நம்பியாண்டார் நம்பி என்பவர்.

## வடிவத் தியானம்

'ஒருகோட்டன், இருசெவியன், மும்மதத்தன்,
நால்வாய்ஐங் கரத்தன்; ஆறு
தருகோட்டம் பிறைஇதழித் தாழ்சடையன்
தருமொருவா ரணத்தின் தாள்கள்
உருகோட்டன் புடன்வணங்கி, ஓவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருகோட்டும் அயன்திருமால் செல்வமும்ஒன்
றோஎன்னச் செய்யுந் தேவே.'

## பிரார்த்தனை

'திருவும் கல்வியும் சீரும்த ழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காயவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.'

கதிரவன் சிங்கராசியில் இருக்கும்போது, அதற்குரிய ஆவணி மாதமே ஆண்டின் முதல் மாதமாகக் கருதப்பட்ட ஒரு காலத்திலே ஓங்காரத் தெய்வ வணக்கம் சிறப்பாக எல்லாராலும் அத்திங்களில் நடத்தப்பெற்று வழக்கத்தில் வருவதாயிற்று.

## நம்பியாண்டார் நம்பி சரிதம்

சிதம்பரத்திற்கு மேற்கே சுமார் பத்து மைல் தூரத்திலுள்ள திருநாரையூரிலே சுயம்பாக முளைத்த பிள்ளையார் திருவடிவத்திற்கு ஓர் ஆதி சைவர் நாள்தோறும் பூசை புரிந்து வந்தார். (சுயம்பாக முளைத்த பிள்ளையார்= பொல்லாப் பிள்ளையார். பொல்லா=பொள்ளாத, உளி முதலியவற்றால் போழ்ந்து செய்யப்படாத என்பது கருத்து.) பிள்ளை

யாருக்குப் பூசை புரியும் ஆதிசைவருக்கு ஐந்து வயதுள்ள ஒரு குமாரர் இருந்தார். ஆதிசைவர் ஒரு நாள் அயலூருக்குப் போக வேண்டியிருந் தமையால், தம் குமாரரைப் பிள்ளையாருக்குப் பூசை செய்யும்படி கட்டளையிட்டனர். தந்தை யார் கட்டளையின்படி புதல்வர் பிள்ளையா ருக்குத் திருமுழுக்கு, ஆடை சார்த்தல், மாலை சார்த்தல் முதலியன எல்லாம் செய்து, சமைத்த அன்னத்தைப் பிள்ளையார் திருமுன் வைத்து, அவர் அதனை உட்கொள்ள வேண் டும் என்று வேண்டினர். புதல்வர் நெடுநேரம் வேண்டியும், பிள்ளையார் திருவமுது செய்யா மல் சும்மா இருந்தமையால், புதல்வர் மனம் நொந்து, தம்மிடத்தில் ஏதோ பணிவிடைத் தவறு ஏற்பட்டதாகக் கருதித் தமது தலையை ஒரு கல்லில் மோதத் தொடங்கினர். அப் போது பிள்ளையார், 'தம்பீ, பொறு!' என்று அவரைத் தடுத்து நிவேதனத்தை உட்கொண் டனர். அது கண்ட புதல்வர் பெருமகிழ் வுற்றுப் பிள்ளையாரைப் பன்முறை பணிந்து, 'சுவாமி, அடியேன் பள்ளிக்கூடம் செல்வ

தற்குக் காலம் தாழ்த்துவிட்டது. இனி அங்கே சென்றால், ஆசிரியர் அடிப்பர். ஆதலால், தேவரே அடியேனுக்கு மறை முதலிய எல்லாக்கலைகளையும் கற்பிக்க வேண்டும்,' என்று வேண்டினர். பிள்ளையாரும் அவ்வாறே செய்தனர். அயலூரிலிருந்து திரும்பிய ஆதி சைவர் தம் புதல்வராகிய நம்பியாண்டார் நம்பியின் அருஞ்செயலை அறிந்து, அளவிலா வியப்பும் களிப்பும் அடைந்தனர்.

அக்காலத்தில் அரசாண்ட அபய குல சேகர சோழ மன்னர், தேவார ஏடுகள் முற்றிலும் காணப்பெருது, நம்பியாண்டார் நம்பியிடம் வந்து, அவர் வாயிலாகப் பிள்ளை யார் திருவருள் பெற்றுச் சிதம்பரத்தில் அவை ஓரறையில் சேமிக்கப்பட்டுக் கிடப்பதை அறிந்து, அவற்றை எடுத்து உலகிற்கு வெளி யாக்கினர். அங்கே கிடைத்த தேவாரப் பதிகங் களை ஏழு திருமுறையாகவும், திருவாசகத்தை எட்டாந்திருமுறையாகவும், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்பனவற்றை ஒன்பதாந்

திருமுறையாகவும், திருமந்திரத்தைப் பத்தாந் திருமுறையாகவும், பிற அடியார்களது அருட் பிரபந்தங்களைப் பதினோராந்திருமுறையாக வும் வகுத்தவர் நம்பியாண்டார் நம்பியே. நம்பியாண்டார் நம்பி அருளிச்செய்த பிரபந் தங்களைச் சோழ மன்னர் பதினோராந்திரு முறைப் பிரபந்தங்களோடு சேர்த்தனர். பின் னர், பெரிய புராணம் பன்னிரண்டாவது திருமுறையாகச் சேர்க்கப்பட்டது. வடமொழி வேதங்களை வகுத்தவர் வியாசர். சிறந்த தமிழ் மறைகளாகிய திருமுறைகளை வகுத்தவர் நம்பியாண்டார் நம்பி.

# II

## கலைமகளும் திருமகளும்

உலகத்தைப் படைத்துக் காத்து ஒடுக்கு வதற்குத் துணை புரியும் கடவுளுடைய சத்தி மூன்று வகையாகப் பேசப்படும்; உலகத்தைப் படைத்தற்கு வேண்டும் அறிவை உதவும் ஞான சத்திக்குக் கலைமகள் என்பது பெயர். உலகத்தைக் காத்தற்குத் துணை புரியும் சத்திக்குத் திருமகள் என்பது பெயர். உலகத்தை ஒடுக்கும் சத்தி காளி எனவும், மலை மகள் எனவும் பல வகையாகப் பேசப்படும். மூன்று செயலுக்கும் மூன்று தலைவர் உளர் என நம் சமயநூல்கள் கூறும். அத்தலைவர்களை இயக்கும் கடவுள் ஒருவரே. அவருடைய சத்தியும் ஒன்றே. மூவரின் சத்திகளையும் அச்சத்தியே இயக்கும். ஒடுக்கும் தலைவரும் அவரது சத்தியும் கடவுளோடு ஒற்றித்துப் பேசப்படுதலின், இங்கே கலைமகளுக்கும் திருமகளுக்குமே வணக்கம் கூறப்படும்.

கலைமகளது திருவடிவம் ஞானமயமானதால், அதனை வெண்மை நிறமாகப் புனைந்துரைத்தல் நூலவர் மரபு. கலைமகளுக்கு வெள்ளையுடையும், வெள்ளை அணியும், வெண்டாமரையும் உரியனவாகப் பேசப்படுதல் யாரும் அறிந்ததே. வெண்மை நிறத்திற்குப் பதிலாகப் பளிங்கு நிறத்தைக் கூறுதலும் உண்டு.

'வெள்ளைக் கலையுடுத்து, வெள்ளைப் பணிபூண்டு,
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியா சனத்தில் அரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய்.'

என்று காளமேகப் புலவரும்,

'ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்அம்மை — தூய
உருப்பளிங்கு போல்வாள்என் உள்ளத்தினுள்ளே
இருப்பள்இங்கு வாரா திடர்.'

என்று கம்பரும் கூறியது காண்க. அறிவினால் இடையூறுகள் எல்லாவற்றையும் நீக்குதல் கூடுமாதலின், கலைமகள் உள்ளத்தில் இருக்குங்கால் இடர் வாராது என்றார் கம்பர்.

குமரகுருபரர் வடநாடு சென்ற காலை இந்துஸ்தானி முதலிய பல கலை அறிவு எளிதாய்த் தமக்கு உதிக்கும்பொருட்டுப் பாடிய சகல கலாவல்லிமாலை, கலைமகள் சார்பாக உள்ளதே. அதில் ஒரு பாட்டு வருமாறு:

'பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற்
பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு
தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங்
காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல
கலாவல்லியே!'

கலைமகள் வீணை உடைமையால் இசைத் தமிழுக்கும், மயில்மேல் வீற்றிருப்பதால் நாடகத் தமிழுக்கும் தலைவியாவள் என்பது ஊகித்தறியத்தக்கது. இயற்றமிழுக்கு அவள் தலைவி என்பது வெளிப்படை.

பிள்ளையார் வழிபாட்டை ஆவணியில் சிறப்பாக அமைத்தது போல, அவருடைய திருவருளால் ஊனமின்றி வளர்ந்து ஐந்தாண்டு

எய்திய குழந்தைகள் கலைமகளைத் தொழுது கல்வி தொடங்கும் மாதமாகப் புரட்டாசி மாதம் அமைக்கப் பெற்றிருக்கின்றது. அம் மாதத்திலேயே மூன்று சத்திகளுக்கும், ஒவ்வொருவருக்கு மூன்று மூன்று நாளாக ஒன்பது நாட்கள் வழிபாட்டிற்கு வகுக்கப்பட்டுள்ளன. வழிபாட்டிற்குச் சிறந்த பொழுது தொழிலி னின்றும் ஓய்வு பெற்றிருக்கும் இரவுப் பொழுதே ஆதலின், அவ்வொன்பது நாளும் **நவராத்திரி** என்று சிறப்பாகப் பேசப்படும். வட நாட்டில் **துர்க்கை**யின் பூசைக்காலமும் அதுவே. ஒன்பது நாட்களோடு இறுதி நாளாக ஒன்று சேர்த்துப் பத்து நாள் அப்பூசனை நிகழ்தலின், '**தசரா**' என்ற பெயர் அதற்கு ஏற்பட்டுள்ளது. மன்னர்களும் செல்வர்களும் திருமகளை வழி படும் காலமும் அதுவே.

### திருமகள் துதி

'செங்கமலப் பொலந்தாதில் திகழ்ந்தொளிரும்
எழில்மேனித் திருவே! வேலை
அங்கணுல கிருள்துரக்கும் அலர்கதிராய்
வெண்மதியாய் அமரர்க் கூட்டும்

பொங்கமுலாய் உலகளிக்கும் பூங்கொடியே !
நெடுங்கானில் பொருப்பில் மண்ணில்
எங்குளை நீ அவணன்றே மல்லல்வளஞ்
சிறந்தோங்கி இருப்ப தம்மா !'

'முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்,' என்றபடி உலகில் எக்காரியமும் திருமகள் கருணையால் முற்றுப்பெறும் என்பது கருதிய சிறந்த முனிவராகிய இராமலிங்க சுவாமிகள் திருமகளை வேண்டிய பாடல் வருமாறு :

'உலகம் புரக்கும் பெருமான்தன்
உளத்தும் புயத்தும் அமர்ந்தருளி
உவகை அளிக்கும் பேரின்ப
உருவே ! எல்லாம் உடையாளே !
திலகம் செறிவாள் நுதற்கரும்பே !
தேனே ! கனிந்த செழுங்கனியே !
தெவிட்டா தன்பர் உளத்துள்ளே
தித்தித் தெழுமோர் தெள்ளமுதே !
மலகஞ் சுகத்தேற் கருள் அளித்த
வாழ்வே ! என்கண் மணியே !என்
வருத்தம் தவிர்க்க வருங்குருவாம்
வடிவே ! ஞான மணிவிளக்கே !

சலகந் தரம்போற் கருணைபொழி
தடங்கண் திருவே! கணமங்கைத்
தாயே! சரணம் சரணம்; இது
தருணம்; கருணை தருவாயே.'

செந்நிறம் மங்கலத்திற்கு அடையாளமாகக் கருதப்படுதலால், திருமகளுக்குச் செந்நிறம் கூறப்பட்டுள்ளது. உடம்பில் உயிர் நிலைத்தற்கு ஆதாரமாகிய இரத்தம் செந்நிறமாய் இருத்தல் காண்க. சத்திகளைத் தியானிக்கும் இடம் இருதயம் ஆனதாலும், இருதயம் தாமரை வடிவாய் இருத்தலாலும், கலைமகளுக்கு வெண்டாமரையும், திருமகளுக்குச் செந்தாமரையும் இடமாகப் பேசப்பட்டன.

## III

# முருகர்

கடவுளை ஆனந்த வடிவமாக வழிபடுகின்றவர் களங்கமற்ற இன்பத்தை நமக்கு அளிக்கும் அழகிய பிள்ளை வடிவமாக அவரைக் கருதுவாராயினர். இளமையும் அழகும் எழிலும் அமைந்த குமரத் திருவடிவத்தையே முருகராக அன்பர் வணங்குகின்றனர். மறக்கருணையினாலே சூரனை ஆட்கொண்டு முருகப்பிரான் அவனைத் தம் திருவடிக்கீழ் இருத்திய திருவிழாக் கொண்டாடப்படும் ஐப்பசி மாதமே அப்பெருமான் வழிபாட்டிற்குச் சிறந்த காலமாகக் கருதப்படும். ஆறு நாளில் காமம், வெகுளி, ஈயாமை, மயக்கம், செருக்கு, பொறாமை என்னும் அறு பகைகளை வென்று முத்தியடைய விரும்புகிறவர்கள், ஆறு நாள் நோன்பிருத்தற்பொருட்டுக் கந்த சஷ்டி விரதம் ஐப்பசி மாதத்தில் ஏற்பட்டுள்ளது. தாம் நாற்றிசையிலும், மேலும், கீழும் வியா

பகம் உடைய பெருமான் என்பதையும், அறு வகைச் சமயங்கள் கூறும் முடிந்த பொருளும் தாமே என்பதையும் குறிப்பதற்கு முருகர் ஆறு திருமுகம் கொண்டாரென்பர் அறிஞர். முருகரை ஞான குருவாகவே அருணகிரிநாதர் முதலிய பெரியார்கள் கொண்டுள்ளார்கள். அது,

'அபசார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநான் நினைந்தருள் பெறுவேனோ!
இபமா முகன்றனக் கிளையோனே!
இமவான் மடந்தைஉத் தமிபாலா!
செபமாலை தந்தசற் குருநாதா!
திருவாவி னன்குடிப் பெருமாளே!'

என்னும் திருப்புகழால் இனிது விளங்கும்.

## அறுமுகவர் துதி

'முழுமதி அன்ன ஆறு
முகங்களும் முந்நான் காகும்
விழிகளின் அருளும் வேலும்
வேறுள படையின் சீரும்

*அழகிய கரம்ஈ ராறும்*
*அணிமணித் தண்டை ஆர்க்கும்*
*செழுமலர் அடியும் கண்டான்*
*அவன்தவம் செப்பற் பாற்றே!'*

ஓங்காரத் தெய்வமும் முருகரும் இறைவரின் புதல்வராவர். படைப்புக்கு முன் தோன்றிய திருவடிவத்தை மூத்த பிள்ளையாராகவும், படைப்புக்குப் பின் ஞானமும் பேரின்பமும் அருளுவதற்குத் தோன்றிய திருவடிவத்தை இளைய பிள்ளையாராகவும் நூல் வல்லார் கூறுவாராயினர். முருகப்பெருமான் சூரபதுமனை ஆட்கொள்ளப் புறப்பட்ட காலத்தே, அவர் அயனிடம் பிரணவப் பொருளை வினவ, அவன் அதனைத் தக்க முறையில் கூருமையால், அவனைக் குட்டிச் சிறை இருத்தினர் என்பது கந்தபுராணத்துள் கூறப்பட்டது. முருகர் உலகிற்குக் குருநாதர் என்பதை உலகினருக்கு ஒரு திருவிளையாட்டால் அறிவிக்கக் கருதிய அரனார், பிரணவப் பொருளைத் தமக்குக் கூறும்படி முருகரை வேண்டியதாகவும், அவர் தம்மிடம் மாணவர்

முறையில் அதனைக் கேட்க வேண்டுமென்று செப்பியதாகவும், அரனார் அவ்வாறே பணிந்து நின்று கேட்டதாகவும் ஒரு சரிதங் கூறப்படுகிறது. சுவாமி மலை என்னுமிடத்தில் சுவாமியாகிய சிவபெருமானுக்கு முருகர் குருநாதராய் இருந்து உபதேசித்ததுபற்றிச் சுவாமிநாதர் என்ற திருப்பெயரோடு அங்கே அவர் திகழ்கின்றார் என்பர். அது குறிக்குந் திருப்புகழ்ப் பாட்டு வருமாறு :

'மருவே செறித்த குழலார் மயக்கி
மதனா கமத்தின் விரகாலே
மயலே எழுப்பி இதமே அருத்தி
மலைபோல் முலைக்குள் உறவாகிப்
பெருகா தல்உற்ற தமியேனை நித்தல்
பிரியாது பட்சம் மறவாதே
பிழையே பொறுத்துன் இருதாளில் உற்ற
பெருவாழ்வு பற்ற அருள்வாயே ;
குருவாய் அரற்கும் உபதேசம் வைத்த
குகனே ! குறத்தி மணவாளா !
குளிர்கால் மிகுத்த வளர்போ தமுற்ற
குடகா விரிக்கு வடபால்வாழ்

திருமால் தனக்கு மருகா! உமைக்கோர்
சிறுவா! கரிக்கும் இளையோனே!
திருவே ரகத்தில் உறைவாய்! அரக்கர்
சிரமே துணித்த பெருமானே!'

முருகப்பெருமானுக்கு ஒளி பொருந்திய வேல், ஞான சத்தி வடிவம். வள்ளியம்மை, இச்சா சத்தி வடிவம். தெய்வ யானை, கிரியா சத்தி வடிவம். உயிர்களது இச்சா ஞானக் கிரியா சத்திகளை விளக்கும்பொருட்டு அவர் முச்சத்திகளோடு விளங்குகின்றார் என்பதே சத்திகளோடும் வேலோடும் கூடிய அவர் திரு வடிவம் குறிப்பது. வேலைக் கிரியா சத்தி என்றும், தெய்வ யானையை ஞானசத்தி என்றுங் கூறுவாரும் உளர்.

முருகரே பரம்பொருளெனக் கருதி எவ்விடத்தும் அப்பெருமானையே பாடியவர் அருணகிரி நாதர். அவர் திருவண்ணமலையில் உருத்திர கணிகையர் மரபில் பிறந்து, இளமையில் சிற்றின்ப வாழ்வில் திளைத்துப் பின், முருகரால் தடுத்தாட்கொண்டு ஆறெழுத்து உபதேசம் அருளப்பெற்றுத் தவங்

கிடந்து முருகரது திருக்கோலக் காட்சியைத் தாம் கண்டதனோடு, பிரபுடதேவ மன்னனுக்குங் காண்பித்து, தமிழ் நாட்டிலுள்ள வயலூர், விராலி மலை முதலிய முருகர் திருப்பதிகள், மடங்கள், தனிக் கோவில்கள் எங்குஞ் சென்று முருகர் திருப்புகழ், திருவகுப்பு, கந்தரலங்காரம், கந்தரனுபூதி முதலிய அருட் பிரபந்தங்கள் பாடிப் பிரணவ மந்திர வடிவுற்றுப் பெருமான் திருவடியில் கலந்தனர்.

அருணகிரியார் துதி

'அருவமொரு நான்காகி உருவமொரு
நான்காகி அறையி ரண்டும்
மருவியுள உருவருவம் ஒன்றாகி
முத்திறமும் வழுத்த வொண்ணுப்
பெருவெளிக்கும் அப்பாலாய் உள்ளபொருள்
ஈதெனவே பெரிதும் சேயோன்
ஒருவனையே புகழ்ந்தஅருள் அருணகிரி
சேவடிப்போ துளத்தில் வைப்பாம்.'

# IV

## சிவமும் சத்தியும்

சத்தாகிய முதலும், சித்தாகிய சத்தியும், ஆனந்தமாகிய குழந்தையும் ஒன்று சேர்ந்த திருவடிவம் சோமாஸ்கந்த வடிவமெனச் சைவ நூல்கள் கூறும். அத்திருவடிவத்தில் நடுவில் குமரப் பெருமானும், அவருக்கு வலப்புறத்தில் சிவமும், இடப்புறத்தில் சத்தியும் அமைந் திருக்கும். 'தாயுடன் சென்று பின் தாதை யைக் கூடும்' உயிருக்கு அடையாளமாக நடுவிலுள்ள முருகரைக் கூறுப. திருவருளி னலே இறைவர் உலகமெங்கும் பரவி நிற்கும் நிலை தாய் நிலை எனவும், உலகத்தைக் கடந்து கடவுள் திருவடியில் முத்தி எய்தும் உயிர் நிற்கும் இடம் நடு நிலை எனவுங் கூறுதல் உண்டு. சிவமும் சத்தியும் கூடிய உமாமகேசுர வடிவம் அல்லது பார்வதி பரமேச்சுர வடிவம் என்பது, உலகில் எப்பொழுதும் ஆணும்

பெண்ணுமாய் ஒத்து வாழும்படி, அப்பொருள்கள் எல்லாவற்றிற்கும் உள் நின்று இயக்கும் அம்மையப்பரது நிலையாகப் பேசப்படும். கயிலைமலையில் அத்திருவுருவத்தோடு கடவுள் காட்சியளிப்பதாக நூல்கள் கூறும். அத்திருவடிவத்தைச் சிவப்பும் பச்சையும் கலந்த திருமேனியாகப் புராணங்கள் இயம்பும். சிவவடிவம் சிவப்பாயும், சத்தி வடிவம் பச்சையாயும் இருப்பவை. பெரிய புராணத்தில் அப்பர் பெருமான் கயிலைத் திருக்கோலங் கண்டதாகக் கூறுமிடத்து, வெள்ளிமலை மீது மரகதக் கொடி படர்ந்த பவள மலையாக இறைவரை வருணித்தமை காண்க :

'வெள்ளி வெற்பின்மேல் மரகதக்
கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளிப் பவளவெற்
பெனஇடப் பாகங்
கொள்ளு மாமலை யாளுடன்
கூடவீற் றிருந்த
வள்ள லாரைமுன் கண்டனர்
வாக்கின்மன் னவனார்.'

கதிரவனது வெண்கதிரைப் பன்னிற மாகப் பகுத்த காலத்து, பச்சையோடு ஒத்த நிறங்களும், சிவப்போடு ஒத்த நிறங்களும் என இரு வகையாக அவை பகுக்கப்பட்டன. செந்நிறம் வெம்மையும் பசுநிறம் தண்மையும் குறிப்பன. செம்மை சிவ வடிவத்திற்கும் பசுமை சத்தி வடிவத்திற்குங் கொள்ளப்படும். சிவப்பு, வெண்சிவப்பு (Orange), மஞ்சள், இருவகை நிறங்களையும் தொகுக்கும் வெள்ளை ஆகிய நான்கும் அப்பன் நிறமென்றும், பசுமை, நீலம், கருநீலம் (Indigo), செந்நீலம் (Violet) என்னும் நான்கும் அம்மை நிறமென்றும் பேசுவதுண்டு. 'நீல மேனி வாலிழை பாகன்' என்று ஓர் ஆசிரியர் இத்திருவடிவத்தைக் குறித்தார். ஒரு திருக்குளத்தில் ஒரு பக்கம் குவளை மலர்களும், ஒரு பக்கம் செந்தாமரை மலர்களும் இருந்ததைக் கண்ட மணிவாசகர், அக்குளத்தை அம்மையும் அப்பனும் போன்ற மடு என்று செப்பினர்.

'பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப்
பைம்போதால்

எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்குமடு.'

என்பது அவர் கூற்று.

இன்னும் திருஞான சம்பந்தர், 'வேயுறு தோளி பங்கன்' என்னும் திருப்பதிகத்தில் ஒவ்வொரு பாட்டிலும் அம்மையப்பரது திருவடிவத்தை அழகாக வருணித்திருத்தல் காண்க :

'வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன்,
வெள்ளி, சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல, அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே,'
'உருவளர் பவள மேனி, ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமே லணிந்
உளமே புகுந்த அதனால் [தென்
திருமகள் கலைய தூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்

**அருநெறி நல்ல நல்ல அவைநல்ல நல்ல**
**அடியார் அவர்க்கு மிகவே."**

அம்மையும் அப்பனும் வெவ்வேருய்த் தோன்றும் திருவடிவம் ஒரு புறமிருப்ப, இருவரும் திருமேனியில் பாதியாணும் பாதி பெண்ணுமாய்த் தோன்றிய திருவடிவம் அர்த்த நாரீச்சுர வடிவம் எனப்படும். அவ் வடிவத்தையே **மங்கை பங்கன்** என்று கூறுவதுண்டு. அத்திருவடிவம் சில திருப்பதிகளிலே தான் காணக் கிடைப்பது. சேலம் ஜில்லாவில் திருச்செங்கோடு என்னுமிடத்திலும், திருநெல்வேலி ஜில்லாவில் வாசுதேவ நல்லூர் என்னுமிடத்திலும் அத்திருவுருவத்தைத் தரிசிக்கலாம். நம் உடம்பிலேயே வலப்பாகத்தை ஆண் பகுதி என்றும், இடப்பாகத்தைப் பெண் பகுதி என்றும் கூறும் வழக்கம் உண்டு. மாதொரு பாகர் திரு உருவினை மணிவாசகனர் அழகாகப் புகழ்ந்துரைத்த திருப்பாட்டு வருமாறு:

**'தோலுந் துகிலுங் குழையுஞ் சுருள்தோடும்**
**பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்**

சூலமுந் தொக்க வளையும் உடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ!'

அத்திருவடிவத்தின் ஒரு பாகத்தில் புலித் தோலும் மற்றொரு பாகத்தில் சேலையும் உடையாகவும், வலக் காதில் குண்டலமும் இடக் காதில் தோடும் முறையே ஆண் பெண் அணியாகவும், நெற்றியின் வலப்பாகத்தில் திருநீறும் இடப்பாகத்தில் சாந்துப்பொட்டும், இடத் திருக்கரத்தில் கிளியும் வளையல்களும், வலப்பாகத்தில் அபயமும் சூலமும் இருப்பதாக இப்பாட்டினுள் குறித்தவாறு காண்க. அம்மையும் அப்பனும் உடன் இருக்கும் திருக்கோலத்திற்கு முன்னதாகவே ஒருடம்பில் இரு பகுதியும் உடைய திருவடிவம் தோன்றி இருத்தல் கூடுமென்பது பற்றி ஆசிரியர் இதனைத் 'தொன்மைக் கோலமே' என்றார்.

குமரகுருபர சுவாமிகள் இத்திருவுருவத்தைக் கூறுமிடத்து, 'பெருமானை ஒருவனென்று சொல்லுவதா, ஒருத்தி என்று சொல்லுவதா!' என்று ஐயம் எழுப்பி, 'ஒரு

6371 ஆ

வன், ஒருத்தி என்ற இரண்டு சொற்களும் இறைவர் திருமேனியில் ஒவ்வொரு பகுதியையே உணர்த்துமாதலின், இரண்டிற்கும் பொதுவான ஒருவர் என்ற சொல்லே இறைவர்க்கு இசைந்தது' என நயம்பட இயம்பினர். அவர் சிதம்பரச் செய்யுட்கோவை ஐம்பத்து நான்காம் செய்யுளில்,

'ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உருவொன் றுலவ்
வுருவையிஃ தொருத்தன்என்கோ ஒருத்தி என்கோ
இருவருக்கும் உரித்தாக ஒருவ ரென்றோர்
இயற்சொல்இல தெனின்யான்மற் றென்சொல் கேனோ!'

என்றது காண்க.